# மெட்ரோ ரயில் நிலைய வாகன நிறுத்தம்: பயண அட்டை மூலம் கட்டணம் செலுத்தும் முறை செப்.1-இல் அமலாகிறது

**சென்னை, ஜூலை 31:** சென்னை மெட்ரோ ரயில் நிலையங்களில் உள்ள வாகன நிறுத்தங்களில் பயண அட்டை மூலம் மட்டுமே கட்டணம் செலுத்தலாம் என்ற புதிய முறை செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப் படவுள்ளது. முன்னதாக, ஆகஸ்ட் 1-ஆம் தேதி அமல்படுத்தப்படும் என்று அறிவித்திருந்த நிலையில், பயணிகளின் கோரிக்கை ஏற்று, ஒரு மாதம் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

சென்னை மெட்ரோ ரயில் பயணிகளின் தடையற்ற போக்குவரத்தை எளிதாக்குவதற்காக மெட்ரோ ரயில் பயண அட்டை மூலம் வாகனம் நிறுத்தும் கட்டணங்களைச் செலுத்தும் ஏற்பாட்டை சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் செய்திருந்தது. இது தற்போது சோதனை அடிப்படையில் அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையில் இந்தப் புதிய முறை, ஆகஸ்ட் 1-ஆம் தேதி முதல் அமல்படுத்தப்படும் என்றும், மெட்ரோ ரயில் பயண அட்டை இல்லாத பயணிகள் மற்றும் பொதுமக்கள், மெட்ரோ ரயில் நிலையங்களில் வாகனத்தை நிறுத்த அங்கு உள்ள வாடிக்கையாளர் சேவை மையம் மூலமாகவோ அல்லது டிக்கெட் கவுன்ட்டர்கள் மூலமாகவோ மெட்ரோ ரயில் பயண அட்டையை வாங்க வேண்டும் என்றும், இதன் மூலம் மட்டுமே பார்க்கிங் கட்டணம் செலுத்த முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், இந்தப் புதிய முறை செப்டம்பர் 1-ஆம் தேதி முதல் அமலுக்கு வருகிறது. பயணிகளின் கோரிக்கையை ஏற்று, ஒரு மாத கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. கட்டணத்தை தொகையாக செலுத்துவதிலிருந்து பயண அட்டை மூலம் செலுத்தும் வசதிக்கு மாறுவதற்கு கால அவகாசம் வேண்டும் என்று மெட்ரோ ரயில் பயணிகள் கோரிக்கை வைத்தனர். இதை ஏற்று, புதிய முறை அமல்படுத்தும் தேதி மாற்றப்பட்டுள்ளது.